பணிப்பாளர் செய்திகள்/செய்திகள் ஆசிரியர் மே 04, 2018

# செய்தி வெளியீடு

# இலங்கைத் தொழிற்பல அளவீடு 2017

## தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

## தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு

**தொ.பேசி : 011-2147446 தொலைநகல் : 011-2147447 மின்னஞ்சல் : sample.survey@statisticsgovlk**

தொழிற்பல புள்ளிவிபரங்களை உத்தியோகபூர்வமாக வெளியிடும் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ. ஜே. சதரசிங்க தெரிவிக்கையில் 2017ம் ஆண்டிற்கான தொழிலற்றோர் விகிதமானது 4.2 சதவீதம் என குறிப்பிட்டுக் கூறியுள்ளார். இங்கு தொழிலற்றவர்கள் என சொல்லப்படுவோர் குறித்த அவதானிப்புக் காலத்தில் தொழில்புரியாமலும் தொழிலைத் தேடிக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டும் தொழில் புரிய வாய்ப்புக்கள் கிடைத்தால் அதனை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாகவும் இருப்போர் தொழிலற்றவர்களாவர்.

இலங்கையில் 15 வயதிற்கு மேற்பட்டோரே தொழில்புரியும் வயதுடையோர் என வரையறுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொழில்புரியும் சனத்தொகையில் குறித்த அவதானிப்பு வாரத்தில் தொழில் இருந்த அல்லது தொழிலற்று இருந்தோர் என அடையாளம் காணப்பட்ட சனத்தொகையே பொருளாதார ரீதியாக செயற்படும் அல்லது தொழிற்படை என அடையாளப்படுத்தப்படுகிறது. இந்தப் பொருளாதார ரீதியாக செயற்படும் சனத்தொகையானது 2017ம் ஆண்டில் 8.6 மில்லியன் என மதிப்பிடப்படுள்ளது. இவர்களில் ஆண்கள் 63.4 சதவீதமாகவும் பெண்கள் 36.6 சதவீதமாகவும் உள்ளனர்.

வேலை செய்யும் வயதுடையோரில் தற்போது பொருளாதார ரீதியாக செயற்படும் சனத்தொகையே தொழிற்பலம் என வரையறுக்கப்படுகிறது. தொழிற்பலத்தில் பங்குபற்றுவோர் சதவிகிதமானது (LFPR) தொழிற்பல வயதுடைய (15 வயதும் அதற்கு மேலும்) சனத்தொகையில் உள்ள தொழிற்படை சனத்தொகை என்ற சதவீதத்தில் விபரிக்கப்படுகிறது. 2017ம் ஆண்டிற்கான மொத்தத் தொழிற்பலத்தில் பங்குபற்றுவோர் சதவீதமானது (LFPR) 54.1 ஆக இருப்பதை அளவீட்டு முடிவுகள் வெளிப்படுத்துகின்றது. மேலும் இந்த விகிதமானது ஆண்களின் தொழிற்பல பங்குபற்றுகையானது ஆண்களில் 74.5 என்ற வகையிலும் பெண்களில் பெண்களின் தொழிற்பல பங்குபற்றுகையானது 36.6 என்றவகையிலும் இருப்பதைக் காணலாம்.

ஒருநபர் தொழில் புரிபவராக, தொழில் கொள்பவராக, சொந்தத்தில் தொழில் புரிபவராக அல்லது குடும்ப தொழில் முயற்சிக்கு உதவுபராக குறித்த அவதானிப்பு வாரத்தில் ஒரு மணித்தியாலமாவது செயற்பட்டிருப்பின் அவ்வாறான நபர் தொழிலிருந்தவராகக் கருதப்படுவர். 2017ம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட தொழிலில் இருந்தோர் 8.2 மில்லியனாகும். இவர்களில் 45.5 சதவீதத்தினர் சேவைகள் பிரிவிலும் 28.4 சதவீதத்தினர் விவசாயப் பிரிவிலும் 26.1 சதவீதத்தினர் கைத்தொழில் பிரிவிலும் பணிபுரிகின்றனர். ஆதற்கமைவாக, இவர்களின் உயர்ந்த பங்களிப்பான சேவைகள் பிரிவில் இருப்பதுடன் கைத்தொழில் பிரிவில் குறைந்த பங்களிப்பு இருக்கின்றது. தொழில்புரிபவர்களில் 67.5 சதவீதத்தினர் ஒரு வாரத்தில் 40 மணித்தியாலத்திலும் கூடிய காலம் பணியாற்றுவதை அளவீட்டு முடிவுகள் உறுதி செய்கின்றன.

இலங்கையில் உள்ள தொழிற்பலம், தொழில்புரிவோர், தொழிலற்றோர் என்பனவற்றின் அளவுகளையும் போக்குகளையும் கணிப்பிட்டுக் கொள்வதற்காக இலங்கை தொழிற்பல அளவீடானது (LFS) வடிவமைக்கப்பட்டதாகும். இந்த அளவீடானது 1990ம் ஆண்டின் முதலாம் காலாண்டில் இருந்து காலாண்டு ரீதியாக மேற்கொள்ளப்படுகிறது. இவ் அளவீட்டு தொடரின் 37வது வருடத் தொடராக 2017இன் தொழிற்பல அளவீடு (LFS) இருக்கிறது. 2017ம் ஆண்டிற்காக 25,750 வீட்டுக்கூறுகளை மாதிரிகளாகக் கொண்டு அவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தொழிற்பல புள்ளிவிபரங்களை தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களமானது (DCS) வெளியிட்டுள்ளது.

கலாநிதி. ஏ. ஜே. சதரசிங்க
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்